நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

Registered as a NewsPaper    மக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE ELEANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    சித்திரை 06    (18 - 04 - 1992)    சனிக்கிழமை    ஓசை: 60

## வினாத்தாள்கள் முழுவதும் நேற்று வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கான 2ஆம் தொகுதி வினாத்தாள்கள் நேற்று விமானம் மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டு யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன. இதில் 20 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையான பரீட்சைக்கு உரிய வினாத்தாள்கள் அடங்கியுள்ளன அத்துடன் 26 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள், 22 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தொழில் நுட்பக் கல்லூரிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள், 26 ஆம் திகதி நடைபெறவுள்ள நடுத்தர ஆய்வுகூட ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் என்பனவும் எடுத்துவரப்பட்டுள்ளன. (பா)

# தெரிவுக் குழுவின் தீர்வை ஏற்கும் வரை புலிகளுக்கு எதிரான போர் தொடரும்

## யுத்த நிறுத்தத்தை அரசு விரும்பவில்லை

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக் குழு முன்வைக்கவிருக்கும் யோசனைகளையும், நிபந்தனைகளையும் இனப் பிரச்சினையின் இறுதித் தீர்வாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடிவு செய்திருக்கிறது. இந்த யோசனைகளை விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொண்டு ஆயுதப் போராட்டத்தை கைவிடும் வரை தொடர்ந்து யுத்தத்தை நடத்துவதெனவும் பிரேமதாசா அரசு தீர்மானித்திருக்கிறது. எனவே யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் விரும்பவில்லை என்றும் போரைத் தொடர்ந்து நடத்தி இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயல்வதே அரசின் இன்றைய தந்திரோபாயமாக உள்ளது.

விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளென ஏற்றுநேரடிப் பேச்சு நடத்த சிறிலங்கா அரசாங்கம்விரும்பவில்லை எனத் தெரிய வருகிறது. இதற்கு தென்னிலங்கையில் பிரேமதாசா அரசிற்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியும், விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்வதற்கு இராணுவம் விரும்பாமையும் இந்தியா நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தக் கூடாது என கொடுக்கும் இராஜதந்திர அழுத்தமும் காரணம் எனவும் தெரிய வருகின்றது.

இந் நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை முழுமையாகப் பாராளுமன்றத் தெரிவு குழுவிடமே ஒப்படைப்பது என சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது இதே வேளை இன்னும் சில தினங்களில் கூடும் பாராளுமன்றத் தெரிவு குழு ஓரிரு வாரங்களுக்குள் தமது தீர்வுக்கான யோசனைகளை முன் வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு தெரிவுக் குழு முன்வைக்கும் யோசனையை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளும்வரை இராணுவ நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதாக அரசாங்கம் திட்டமிட்டுள்ளது அரசாங்கத்தின் இவ் யோசனைக்கு ஏற்ப இவ்வருட முடிவிற்குள் விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்தி விடலாம் என அரசிற்கு இராணுவ தலைமைப்பீடம் உறுதியளித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## வீரச்சாவு
### லெப். கர்ணன்

பொலனறுவ குவாட்டஸ் முகாமிலிருந்து கடந்த மாதம் வெளியேறிய இராணுவத்தினர் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதலின்போது காயமடைந்த போராளியான லெப்ரினன்ட் கர்ணன் (வடிவேல் ரவிச்சந்திரன் -பெரிய கல்லாறு)வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மன்னாரில்21வீடுகள் எரிப்பு இராணுவத்தால் பலர் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள முள்ளிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் 21 வீடுகளும் பல மீன்பிடி உபகரணங்களும் தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளன.

கடந்த சனியன்று கடல் மார்க்கமாகவும் காட்டுப் பகுதியினூடாகவும் வந்து முள்ளிக்குளம்பகுதியைசுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்குள்ள மக்களை வெளியேற்றிய பின் 21 வீடுகளுக்கு தீ வைத்துள்ளனர்.

அங்கிருந்த கரைவலைகளி 2 வள்வங்கள் ஒரு பிளாஸ்ரிக் படகு,வெளி இணைப்பு இயந்திரம் என்பனவும் தீயில் எரிந்து சாம்பராகின.

அங்கிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் பல ஆண்களை கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

## பதவி விலகலுக்கு சிங்கராயர் மறுப்பு

எமது செய்தித்தாளில் 16-04-1992 வியாழக்கிழமை "அருட்திரு. சிங்கராயர் பாலம் தலைவர் பதவி துறப்பு" என்ற தலைப்பில் வெளிவந்த முன்பக்கச் செய்தி தொடர்பாக அருட்திரு. ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி மறுப்பு எழுதியுள்ளார்.

அந்த மறுப்பில், ஆபரணம் சிங்கராயராகிய தான் எவ்வித பதவி விலகல் கடிதத்தையும் எழுதவில்லை எனத்தெரிவிக்கிறார். அவரின் இந்த நிலைப்பாடு சரியானதே. 16-04-1992 செய்தியில் குறிப்பிட்டதுபோல் பதவி விலகல் கடிதம் எதையும் அருட்திரு. சிங்கராயர் அனுப்பவில்லை. கடிதம் மூலம் பதவி விலகியதாக வெளிவந்த செய்திக்கு வருந்துகிறோம்.

ஆனால், அருட்திரு. சிங்கராயர் 30-12-91 இல் பாலம் செயலர் திரு. கூ சிறிலுக்கு எழுதிய கடிதமொன்றில், "... இம்மடல் வழியாக நான் அன்று வாய்மொழியாகச் சமர்ப்பித்த பதவி துறத்தலை இன்று எழுத்து மூலம் மீளப்பெற்றுக்கொள்ளுகிறேன் என்ற வாசகம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் அருட்திரு. ஆபரணம் சிங்கராயர் தான் ...

## மின்சாரம் இன்மையால் யாழ். மக்களின் கஷ்டத்தை இன்று நாம் உணர்கிறோம்

தற்போது மின்சார வெட்டு காரணமாக பெரும் அசௌகரியத்தை நாம் எதிர்நோக்குகின்றோம். ஆனால் வடபகுதி மக்கள் பல மாதங்களாக மின் விநியோகம் இன்றி கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள்.

வடபகுதி விஜயம் தொடர்பாக அவர்கள் விடுத்திருக்கும் பத்திரிகைச்செய்தியில்மேலும், யுத்த நிறுத்தத்திற்காக புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று வலியுறுத்தும் அதேவேளை பாதுகாப்புப் ...

## அம்பாறை, மஹரகம குண்டுவெடிப்பு விசாரணை பெரும் முன்னேற்றமாம்

(கொழும்பு)

அம்பாறையிலும், மஹரகமையிலும் கடந்தவாரம் நடைபெற்றகுண்டுவெடிப்புச்சம்பவங்கள் பற்றிய விசாரணைகளில் ... பட்டுள்ளதாக சிறிலங்கா புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிலங்கா ...

## கொழும்பு பயணிகள் மீது வவுனியாவில் தாக்குதல்

(வவுனியா)

வடபகுதியிலிருந்து பேயாடி கூழாங்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக வவுனியா நகரப் பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் தமிழ்ப் பயணிகள் மீது சிறிலங்கா இராணுவத்தின் உளவுப் படையினர் பெரும் ...

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்கள், தளங்கள் சம்பந்தமான தகவல்களை அறிந்துகொள்ளும் நோக்குடன் பயணிகள் மீது தாக்கத் தொடங்கியுள்ளனர். அப்பாவிப் பயணிகளுக்கு பல நிர்ப்பந்தங்கள் கொடுத்து அவர்களிடமிருந்து விஷயங்களை ...

## யாழ். மக்களின் கஷ்டத்தை இன்று நாம் உணர்கிறோம்

தற்போது மின்சார வெட்டு காரணமாக பெரும் அசௌகரியத்தை நாம் எதிர்நோக்குகின்றோம். ஆனால் வடபகுதி மக்கள் பல மாதங்களாக மின் விநியோகம் இன்றி கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். யாழ்ப்பாணம் சென்று திரும்பியதும் இந்த விடயங்களைத் தென்பகுதி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வோம் என்று தென்னிலங்கைப் பௌத்த பிக்குகள் கூறியுள்ளனர்.

வடபகுதி விஜயம் தொடர்பாக அவர்கள் விடுத்திருக்கும் பத்திரிகைச்செய்தியில்மேலும், யுத்த நிறுத்தத்திற்காக புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று வலியுறுத்தும் அதேவேளை பாதுகாப்புப் படைகளும் யுத்தநிறுத்தத்திற்காக அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டுமென அரசைக் கோர விருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

## மூவரை ஆஜராக்குமாறு ஆட்கொணர்வு மனு

காரணம் கூறப்படாமல் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவல் உத்தரவினால் மகசீன் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மூவரை மேன் முறையீட்டு நீதி மன்றத்தின் முன் ஆஜர் செய்யக்கோரி ஆட்கொணர்வு மனுதாக்கல் செய்யப் பட்டுள்ளது.

சண்முகம் யோகநாதன் (கல்முனை) கோவிந்தன் செங்காதரன் (கல்முனை) ராசமாணிக்கம் ராசேந்திரன் (மட்டக்களப்பு) ஆகியோரை ஆஜர் செய்யவேண்டுமெனக் கோரி அவர்களது உறவினர்களால் மனுத்தாக்கல் செய்யப் பட்டுள்ளது

## குற்றப் பத்திரம் தாக்கலில் அரசு தரப்பு குளறுபடி
### ஒருவர்மீது இரு பத்திரங்கள் தாக்கல்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் ஒரே நபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் இரு குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்த சம்பவம் கொழும்பு நீதிமன்றத்தில் இடம் பெற்றது,

பெரிய புல்லு மலையைச் சேர்ந்த பயில்வாகனம் சிவலிங்கம் ஆயித்திய மலை அகதிகள் முகாமில் கடந்த 24-09-90இல்இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

தடை செய்யப்பட்ட குற்றங்களை விடுதலைப் புலிகள் புரிய இருப்பது பற்றி தெரிந்திருந்தும் அரசபடையினருக்கு தகவல் கொடுக்கத் தவறிய தாக அவர்மீது குற்றம் சாட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

உடுவில் வட்டவை பிரிவில் இன்று இணுவில் கந்தசாமி கோவிலில் தியாகச் சுடர் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணா விரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

அடையாள உண்ணாவிரதம் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை இடம் பெறும்.

நினைவஞ்சலிக் கூட்டம் பிற்பகல் 7.00 மணிக்கு ஆரம்பமாகும். இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் சோபன், மகாதேவன், தமிழன்பன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம் பெறவுள்ள கலை நிகழ்ச்சிகளில் சின்னமணி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது.

## குண்டுவெடிப்பு விசாரணை பெரும் முன்னேற்றமாம்

(கொழும்பு)

அம்பாறையிலும், மஹரகமையிலும் கடந்தவாரம் நடைபெற்ற குண்டுவெடிப்புச்சம்பவங்கள்பற்றிய விசாரணைகளில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக சிறிலங்கா புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

(வவுனியா)

வடபகுதியிலிருந்து பேயாடி கூழாங்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக வவுனியா நகரப் பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் தமிழ்ப் பயணிகள் மீது சிறிலங்கா இராணுவத்தின் உளவுப் படையினர் பெரும் கெடுபிடி செய்ய ஆரம்பித்துள்ளனர்.

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்கள், தளங்கள் சம்பந்தமான தகவல்களை அறிந்துகொள்ளும் நோக்குடன் பயணிகள் மீது தாக்கத் தொடங்கியுள்ளனர், அப்பாவிப் பயணிகளுக்கு பல நிர்ப்பந்தங்கள் கொடுத்து அவர்களிடமிருந்து விஷயங்களை அறிந்து கொள்வதில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

செயலர் திரு. சூ. சிறிலுக்கு எழுதிய கடிதமொன்றில், "... இம்மடல் வழியாக நான் அன்று வாய்மொழியாகச் சமர்ப்பித்த பதவி துறத்தலை இன்று எழுத்து மூலம் மீளப் பெற்றுக் கொள்ளுகிறேன் என்ற வாசகம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் அருட்திரு. ஆபரணம் சிங்கராயர் தான் இராஜினாமா கோரியதை உறுதிப் படுத்தியுள்ளார்.

05-04-92 இல் பாலம் பணி மனையில் பாலம் செயற்குழுக் கூட்டம் நடைபெறவில்லை என அருட்திரு சூ. சிங்கராயர் தமது கடிதத்தில் எமக்கு அறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் பெரும் பதற்றம்
# குண்டுகள் வெடிக்கும் என பீதி

(கொழும்பு)

கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. மேலும் சில கார் குண்டுகள் வெடிக்கலாம் எனப் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவுவதாகவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வீதிகளில் பொலிசாரும் ஆயுதப்படையினரும் தீவிர வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அதேவேளை கொழும்பின் பல பாகங்களிலும் தமிழ் இளைஞர்களைப் பொலிசார் வீடுவீடாகச் சென்று தேடி வருகின்றனர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பிற்கு கார்க்குண்டுகள்

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

அனுப்பப்பட்டதாக சிறிலங்கா புலனாய்வுத் துறையினருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே விசேட பொலிஸ்பிரிவுகள் ஆங்காங்கே சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், கேந்திர நிலையங்களில் ஆயுதப் படையினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் கொழும்பிலுள்ள பிரதான சந்திகளில் தடைகள் போடப்பட்டு வாகனங்கள் சோதனையிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கொழும்பிற்குள் விடுதலைப் புலிகள் சிலர் ஊடுருவியிருப்பதாக கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வீடுவீடாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

## பொலிஸ் உத்தியோகத்தர் லீவுகள் யாவும் ரத்து

பொலிஸ் உத்தியோகத்தர்களின் லீவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக மறு அறிவித்தல் வரை லீவு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எம் மண்ணில் விழா எடுப்பதற்கு அந்நியர் அனுமதி தேவையில்லை
### — புதுவை

(யாழ்ப்பாணம்)

எங்களுடைய மக்களுக்குக் கலைஞர்கள் ஒரு செய்தி சொல்ல வேண்டும். இந்த மண் எங்களின் சொந்தமண். எமது மண்ணில் எந்த விழாவையும் எடுப்பதற்கு நாம் அந்நியர்களிடம் அனுமதிபெற வேண்டியதில்லை. நாம் எங்களின் மண்ணிலே சுதந்திரமாக விழா எடுக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டும் வகையிலே அடுத்த மாதம் இரண்டாம் திகதி முதல் ஐந்து நாட்கள் தமிழிசை விழாவும், அதற்கடுத்து இரண்டாவது முத்தமிழ் விழாவும் நடைபெறவிருக்கின்றன. இவை வெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளோ, களியாட்டு விழாக்களோ அல்ல என்று விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை எடுத்துரைத்தார்.

நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் சந்தனக்காடு நாடகத்தின் ஐம்பதாவது மேடையேற்றமும், கலைஞர்களுக்கு விருது வழங்கும் வைபவமும் நடந்தபோது அதற்குத் தலைமையேற்றுப் பேசிய திரு. புதுவை இரத்தினதுரை மேலும் கூறுகையில் அச்சமற்ற, பிச்சையற்ற ஒரு சமூகத்தை எமதுதேசத்தில் கட்டி எழுப்பவும், எதிர்காலச் சந்ததி அச்சமற்று நெஞ்சை நிமிர்த்தி வாழவும் போராட்டம் நடத்தப்படுகின்றது என்பதைத் தெளிவுபடுத்தினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் யோகரட்ணம் யோகி இங்கு கலந்து கொண்டு பேசுகையில் 58 லும் சரி, 77லும் சரி, 83லும் சரி அதன் பின்னரும் சரி இனக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேரவகுப்பு
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

(சி/4263)

## பூபதி என்னும் பூகம்பம்



பூபதி என்னும் பூ ஒன்று
பூகம்ப மாகிய நாளன்று
அன்னையவள் அன்று
அகிம்சைப் போரில் அகிலத்துக்கே - எம்
அவலநிலை எடுத்துச் சொன்னாள்
உண்ணாமல் வாடி
உரிமையினைத் தேடி
உணர்த்தியே விட்டாள் உண்மையை உலகுக்கு
கண்ணான எம் இளைஞர்
கைதியாய் சிறையில் வாடும்
காரணம் கேட்டாள்.
பொன்னான தமிழவள் பொங்கியே எழுந்து
புண்ணான நெஞ்சுடன் புது நீதி படைத்தாள்.
உண்ணுவது என்பது உரிமைக்குப் பின்பே
உணர்ச்சி என்பதோ உயிருக்கு முன்பே
உறுதி கொண்டு உணர்த்தினாள் அன்னை
உரிமை கேட்டு நிற்கும் உனக்கும் எனக்கும்
களத்திலவள் காவியம் படைக்கவில்லை
கண்ணீரும் சிந்தியவள் காலம் கழிக்கவில்லை
பெண்ணென்று பேசாதிருக்கவில்லை
பெரியவள் என்று ஒதுங்கியும் ஓடவில்லை
தமிழர் அனைவரும் தாயகம் மீட்க
தாகம் கொண்டவரென்றுதாயவள் தன்சரித்திரம்தந்தாள்
போய் அவள் - இன்று
போனது நாலாண்டானாலும்
சேய் நாம் அவள் செயலை மறப்போமோ?
அநியாயம் ஆகுமா? அழிப்பதுதான் முடிவாகுமா?
அன்று கேட்ட அன்னையின் அலறல் அதோ . . .
மீன்பாடும் தேன் நாட்டிலிருந்து
நான் வாழும் இந்நாட்டில் ஒலிக்கிறதே
தியாகமே திரியாய் கொண்டு அணைந்த தீபத்திற்கு
அஞ்சலி செய்வோம்.

- அல்லையூர் தர்மினி

## பூட்டான் யோசனை ஆராய்வு

(கொழும்பு)

தெற்காசிய அபிவிருத்தி வங்கியொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென பூட்டான் மன்னர் தெரிவித்துள்ள யோசனையை ஆராய்வதற்கு நிபுணர்களை கொண்ட குழுவொன்றை 'சார்க்' அமைப்பின் செயலாளர் நிறுவியுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்ற ஆறாவது உச்சி மாநாட்டின் போது பூட்டான் மன்னர் இந்த யோசனையை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒயில் கடத்தல் பிடிபட்டது

யாழ்ப்பாணத்துக்கு இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான ஒயிலைக் கடத்தி வர எடுக்கப்பட்ட முயற்சிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரண்டு லட்சத்து அறுபத்தாறாயிரத்து நானூறு ரூபா பெறுமதியான 468 லீற்றர் ஒயில் நீர்கொழும்பு கொச்சிக்கடை பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டது. வடபகுதிக்குச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றை மறித்துச் சோதனையிட்டபோது இது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

பிரபல குளிர்பானங்களின் ஒரு லீற்றர் போத்தலிலேயே இது ஒளித்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் இன்று சனிக்கிழமை 18 ஆம் திகதி நடைபெறவுள்ள கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொள்ள யாழ். கோட்ட அதிபர்களையும், உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

அவசிமானவிடயங்கள் பற்றி கலந்துரையாடவே அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


வடமாநில சுருட்டுத்
தயாரிப்பாளர் சங்கம்

அவசர பொதுக்கூட்டம்

19. 04. 92 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவில் உப்புமடம் பிள்ளையார் கோவிலடியிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் தவறாது அனைத்து உற்பத்தியாளரும் சமுகம் தரவும்.

தலைவர், செயலாளர்
(2477)

மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கப்
பொதுக்கூட்டம்

இடம்: மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
காலம்: 19. 04. 92 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 முதல் மாலை 5.00மணி வரை

சகல உறுப்பினர்களும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பழைய மாணவர் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

தலைவர் இணைச் செயலாளர்கள்
(2452)

முக்கிய அறிவித்தல்

லொறி, உழவுயந்திர உரிமையாளர்கள்

வடபகுதிக்கு வெளியே செல்லும் வாகனங்களுக்கு வழியில் ஏற்படும் போக்குவரத்து சம்பந்தமான நடைமுறை பிரச்சினைகள் குறித்து 20-4-1992 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெறும். இதில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள இருப்பதால் லொறிகள், நாலு சக்கர இரண்டு சக்கர உழவு யந்திர உரிமையாளர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

வடபிராந்திய
பொதி சுமக்கும் வாகன சங்கம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(2472)

ஸ்ரீதர் திரையரங்கில்
தினசரி மாலை 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4-00, 6-00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

Eagles
Over London

(லண்டன் மேலாக கழுகுகள்.) (கி/4272)


31-ம்நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டிக் கிரியையும்



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த
மேஜர் ஜெயாகரன் (சாள்ஸ்)
(கந்தையா ஐங்கரன்)

வீரஜெனனம் 21-02-1969 வீரச்சாவு 19-03-1992

தம்பி ஐங்கரனே! பதின்ஐந்து வயதினில் புலியுடன் இணைந்து அணித் தலைவனாய் பல போர் முனைகளிற் போராடி வெற்றி பெற்றாய் கடைசியில் 19-3-92-ல் மணலாறு சண்டையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஜெயாகரன் (சாள்ஸ்) அவர்களின் 31-ம் நாள் அந்தியேட்டிக்கிரியை 18-04-92 சனிக்கிழமை (இன்று) நடைபெற இருப்பதால் விடுதலைப்புலிகளையும்,

## ஐ.தே.க.யின் விசேட கூட்டம்

(கொழும்பு)

ஐ.தே. கட்சியின் விசேட கூட்டமொன்று இந்த மாதம் 25 ஆம் திகதி சிறிலங்கா ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தலைமையில்சிறிகோத்தாவில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாகாண சபை, நகர சபை, பிரதேச சபை உறுப்

வடமராட்சி கிராமிய கடற்றொழில் சமூகஅபிவிருத்தி அமைப்புக்களினதும் கூட்டுறவுச் சங்கங்களினதும் ஒருங்கிணைப்பு ஒன்றியம்

# தியாக அன்னை பூபதி

# தமிழ்த்தாயின்

தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாகாண சபை, நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர்கள், மாதரணிகளின் பிரதிநிதிகள் ஐ.தே.க. சார்பில் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்கள் என முக்கியஸ்தர்கள் பலரும் இந்தக் கூட்டத்திலே கலந்து கொள்வதற்கு அழைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பிரிவுபசாரம்

யாழ்/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக உதவி ஆசிரியராகக் கடமையாற்றி வந்த திருமதி திலகவதி குமாரசாமி கடந்த 26 - 03 - 1992 இல் ஒய்வு பெற்றுள்ளார். கடந்த முப்பத்தெட்டு வருடங்களாக ஆசிரியையாகக் கடமையாற்றிவந்த இவரின் சேவையைப்பாராட்டி மேற்படி பாடசாலை அதிபர் து. செல்வராசா தலைமையில் கடந்த 01 - 04 - 1992 இல் பாடசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பிரிவுபசார வைபவம் நடாத்தப்பட்டது.

## மின், நீர் சிக்கனம் பேணுக

(கொழும்பு)

பொதுமக்கள் மின்சாரத்தையும், தண்ணீரையும் மிகச் சிக்கனமாக பாவிக்கத் தவறினால் அடுத்த சில தினங்களில் நாட்டில் மிக மோசமான நிலைமை ஏற்படும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போது அமுலில் உள்ள மின்வெட்டு மின் பாவனையை சற்றுக் குறைப்பதற்கு உதவியுள்ள போதும் தேவையற்ற முறையில் மின் விளக்குகளை எரிப்பதனாலும் மின் விசிறிகளை உபயோகிப்பதனாலும் மின் வெட்டினால் பயன் கிடைக்கவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தமிழ்த்தாயின்

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மைந்தன்தனை சீவி, சிங்காரித்து பொட்டிட்டு - பூச்சூடி
கை வேல் அளித்து கொடும் செருக்களம் - அனுப்பி
மகிழ்ந்தனள் தாய் தமிழச்சி ஒருத்தி
மாண்டனன் மைந்தன் முதுகில் புண்பட்டு - என
மாற்றான் ஒருவன் செப்பிய பொய் - கேட்டு
என் மைந்தன் மாண்டானா அதுவும் - முதுகில்
புண்பட்டு அட, என் மகன் கோழையா? இல்லை
மோழையா?
காளை அவனுக்கு பால் ஈந்த மார்பிரண்டுதனை
அறுத்தே எறிந்திடுவேன் என கொடும் - சூளுரைத்தாள்
அந்த பண்டைத் தாய் தமிழச்சி
கூகைகள் கூத்திடும் காரிருள் நேரம் - படுகளத்தில்
மாண்டவீரர் சடலம் தனை தேடுகின்றாள் - அந்த
தாய் தமிழச்சி
மைந்தனை கண்டனள் மார்பினில்
தைத்த வேல் கம்புடன்
மகிழ்ந்தனள் அந்த தாய் தமிழச்சி
இது புறநானூற்றின் பழைய வரிகள்

பண்டைய தமிழனின் பழைய வரலாறு.
ஆனால்
செங்குருதி தனை செந்நீராக்கி உண்ணா
நோன்பிருந்து விடியலின் வேள்வி தனில்
தன்னையே விறகாக்கி புதிய புறநானூறினை
படைத்தவள் எம் அன்னை
காடு கமழ் சந்தனத்தரு அவள்
நாடு புகழ் நல்ல தாய் இவள்
கத்துக் கடல் காத்தமுத்து எம் அன்னை
கற்பூரச் சோலையின் கன்னல் மொழிச்சுவை இவள்
தமிழ் ஈழத்திருநாட்டின் மாணிக்கப் புதையல் இவள்
குவலயம் போற்றிடும் குறிஞ்சித்தேன்
தாயே உன் பாதைச் சுவடுகளை
எம் கண்மலர் என்றும் காத்திடும்.

அன்னையை அன்புடன் நினைவு கூரும்

வடமராட்சி ஒன்றியம் கி. க கூ. ச.

(2480)

விற் போராடி வெற்றி பெற்றாய் கடைசியில் 19-3-92-ல் மணலாறு சண்டையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஜெயாகரன் (சாள்ஸ்) அவர்களின் 31-ம் நாள் அந்தியேட்டிக்கிரியை 18-04-92 சனிக்கிழமை (இன்று) நடைபெற இருப்பதால் விடுதலைப்புலிகளையும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி

கலவெட்டித் திடல், புளியம்பொக்கணை, பரந்தன்.

தாய், சகோதரர்கள் அத்தான், மச்சாள்மார்.

(சி. 4266)

## நினைவுகூருகின்றோம்...
## 1992-04-18

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**ராஜன்** (வாழைச்சேனை, மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

★ **மதி** (செல்லத்துரை மதியழகன் - பாலமுனை)

1991 ஆம் ஆண்டு கப்பல்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் ரகுபதி** (நல்லதம்பி தவசீலன் - 515, 2ஆம் படிவம், கந்தளாய் திருக்கோணமலை)

**லக்ஸ்மன்** (வேலாயுதம் சந்திரலிங்கம் - கரடிப் புலம், சீனன்குடா, திருக்கோணமலை)

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**றொக்கி** (வரதலிங்கம் செல்வகுமார் - சிவன் வீதி, ஆவரங்கால்)

வவுனியாவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த

**மஞ்சலன்** (சண்முகவேல் சத்தியசீலன் - ஒலிவர்த் தோட்டம், நுவரெலியா)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்டுள்ள மாவீரர் மதி ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4281)

## சிந்தனைக்கு

புருவத்தின் சுருக்கங்களை விட இதயத்தின் சுருக்கங்கள் அழிக்க முடியாதவை.

— மதாம் டாரத்தி தெறாஸ்


ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 18-04-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் 05


# சமாதானத்திற்கு நிபந்தனை உகந்ததல்ல

யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கான முயற்சியில் முக்கிய கவனம் செலுத்தப்படவிருப்பதாக யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொள்ளவிருக்கும் பௌத்த குருமார் தெரிவித்துள்ளனர். மேலும் யுத்த நிறுத்தத்திற்காக ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டுமென விடுதலைப் புலிகளைத் தாம் கேட்கவிருப்பதாகவும் அதேவேளை பாதுகாப்புப் படையினரும் யுத்த நிறுத்தத்திற்காக அனைத்து இராணுவ நடவடிக்கையையும் நிறுத்த வேண்டும் என்று அரசைக் கோரவிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

யுத்த நிறுத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்ற பௌத்த குருமாரின் கோரிக்கையானது சரியானதே. விடுதலைப் புலிகளும் கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து ஓர் யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட்டால் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை உருவாகும் என்று வற்புறுத்தி வந்ததோடு ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தையும் அறிவித்தும் இருந்தனர். அமைச்சர் தொண்டமான் சமரசத் திட்டத்தை முன்வைத்தபோதும், தென்னிலங்கையில் இருந்து நல்லெண்ண தூதுக்கள் வந்தபோதும் பேச்சுவார்த்தைக்கு முன்னர் அதற்கொரு சாதகமான சூழ்நிலையை யுத்த நிறுத்தத்தின்மூலம் ஏற்படுத்த வேண்டுமென விடுதலைப் புலிகள் வற்புறுத்தி வந்தனர். புலிகளின் இந் நிலைப்பாடு தூதுக்குழுக்களினால் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தென்னிலங்கையிலும், அரசாங்கத்திடமும் அவர்களால் தெரிவிக்கப்பட்டும் உள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டுமென வற்புறுத்திவருகிறது. அதாவது பேச்சுவார்த்தை நடைபெறவேண்டுமானால் அல்லது யுத்த நிறுத்தம் ஏற்படவேண்டுமானாலும் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என நிபந்தனை விதித்துள்ளது. இந் நிபந்தனைகளே பேச்சுவார்த்தைக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் முட்டுக்கட்டையாக உள்ளது.

இந்நிலையில் தற்பொழுது யாழ்ப்பாணம் நல்லெண்ணவிஜயத்தை மேற்கொண்டு வரவுள்ளதாகத்தெரிவிக்கும் பௌத்த குருமாரடங்கிய தூதுக்குழுவினர் யுத்த நிறுத்தத்தை வற்புறுத்துகின்றனராயினும் அவர்களும் ஆயுதங்களைக்கீழே போடவேண்டும் அப்பொழுது தான் யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் நடைபெற வாய்ப்பு ஏற்படும் அல்லது புலிகளுடன் பேச்சுவார்த்தை

# தியாகச் சுடர் அன்னைபூபதி

அன்னைபூபதி மக்களின் கரை கடந்த உற்சாகத்துக்கு மத்தியில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் தமது ஆயுட்கால உண்ணா விரதத்தை உறுதியோடு கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்

நாளாக ஆக அன்னைபூபதியை சோர்வு தட்டுகிறது தலை சுற்றலும் ஆரம்பிக்கின்றது போகப்போக திடீர் மயக்கத்தில் சரிகின்றார் எனினும் மறுகணமே தன்னைச் சுதாசரித்துக்கொள்கிறார்.

வைத்தியர்கள் அவரைத் தினமும் வந்து பரிசோதித்துச் செல்கின்றனர் முறைப்படி வைத்திய அறிக்கைகள்நாளாந்தம் தயாரிக்கப்படுகின்றன.

அன்னை இவ்வாறு உயிருக்கு போராடிக் கொண்டிருக்கின்றார் இடையில் அமைதிப் படை அதிகாரிகள் இந்திய வீரர்கள் வந்து போகின்றனர்

அன்னையிடம் சமாதானம் சொல்லப் பார்த்தனர் அன்னையோ இந்திய வீரர்களைக் கண்டால் காளியாகமாறினார் மிரட்டினர், பாய்ச்சா பலிக்கவில்லை

கணவர் கணபதிப்பிள்ளை, மக்கள், மருமக்கள் என்று உறவினர்களுக்கு தூண்டில் போட்டு விரதத்தைக் குழப்பியடிக்க எத்தனித்தனர். ம்.... முடியவில்லை.

கணபதிப்பிள்ளை கங்காணியார் குடும்பம் இலேசுப்பட்டதல்ல. வீரத்தாயின் பராமரிப்பில் வளர்ந்தவர்கள் அல்லவா?

இந்தியப் படையினர் போட்ட இரையை அவர்கள் விழுங்குவதாவது. இந்தியாவின் சாணக்கியத் தந்திரங்கள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன.

மகாத்மா காந்தியின் உண்ணாவிரதங்கள், மறியல் இயக்கங்கள், சத்தியாக்கிரகங்கள் மூலம் வெள்ளையனை வெளியேற்றிச் சுதந்திரம் ஈட்டிய நவ பாரதத்திலிருந்து வந்த ஜவான்களா அண்ணல் வழியில் அன்னை பூபதி நடாத்தும் அகிம்சைப் போராட்டத்தை அலட்சியம் செய்கிறார்கள்? குழப்பியடிக்க முனைகின்றார்கள்?

உண்மையிலேயே இவர்கள் இந்திய மண்ணில் பிறந்தவர்களா? அந்த இராமராஜ்ஜியத்திலிருந்து தான்வந்தவர்களா? தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்றெடுத்த அத்தாயகத்திலிருந்து புறப்பட்டவர்களா?

இப்படித் தமிழ் ஈழ நாட்டவர்களுக்கு மாத்திரமல்ல. மனித உரிமை பாராட்டுபவர்களும், ஏன் மகாத்மா காந்தியின் அகிம்சைத் தத்துவத்தில் மதிப்பும் மரியாதையும் வைத்த உலக மக்களும் மூக்கின் மேல் விரல் வைத்து வியட்புற்றனர்; ஐயுற்றனர்.

அமைதி காக்க வந்து மிஞ்சியிருந்த அமைதியையும் குலைத்துக் கொண்டிருந்த அமைதிப் படையினர் மீது சர்வ தேசங்களிலும் வாழும் மனிதாபிமானிகள் அருவருப்புக் கொண்டனர்.



நாட்கள் நகர்கின்றன. அன்னையின் நாடித் துடிப்புக்கள் அச்சத்தைத் தருகின்றன. வைத்தியர்கள் பார்வையில் சந்தேகம் நிழலாடுகிறது.

இனிமேல் ஊசி மருந்து பாய்ச்சுவதை தவிரவேறு வழியில்லை என்று வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.

அன்னை பூபதியோ "எந்தவொரு மருந்தும் எனக்கு தேவையில்லை நீங்கள் போய் விடுங்கள்' என்று நா தளதளக்கக் கூறி மறுக்கிறார்.

அந்த மயக்க வேளையிலும் தன்னை வைத்தியர்கள் நெருங்கி ஊசிபோடாதவாறு எச்சரிக்கையாகவே உள்ளார்.

அன்னையின் பிடிவாதமே வெல்கின்றது.

ஒரு பக்கம் மக்களின் கரை கடந்த உத்வேகம்; மறு பக்கம் மனித ஜீவனைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற வைத்தியர்களின் முஸ்தீபுகள் இடையிடையே உண்ணா நோன்பைக் குழப்பியடிக்கும் இந்திய வீரர்களின் தந்திரோபாயங்கள்.

இத்தனைக்கும் மத்தியில் அன்னை பூபதி தமது இலட்சியத்தை நிறைவேற்றி கோரிக்கைகளை வென்றெடுக்கத் தமது இன்னுயிரைத் துச்சமென மதித்துச் சத்திய யுத்தத்தைத் தொடர்கின்றார்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று... இரு வாரங்களல்ல முழுமையாக முப்பத்தியொரு நாட்கள் அந்தச் சத்தியப் போர் நடந்து 32 ஆம் நாளில் திடுதிப்பென்று ஓய்கிறது.

அங்கு குழுமி நின்ற மக்கள்

த்பேசவில்லை, அசையவில்லை.

அத்தனை மக்களின் கண்களும் நீரைச் சொரிகின்றனவே!

அன்னை பூபதியே பிரிந்து விட்டாயா? இத்தனை நாளுமாக இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் உறுதியுடன் இருந்த உன் எழில் உடல் என்ன சாய்ந்து விட்டதா? தாயே? எந்த உயிரைப் பணயம் வைத்துத் தமிழ் ஈழ மண்ணுக்குச் சமாதானத்தைக் கொண்டு வரக் களத்தில் இறங்கினீரோ அந்த உன்னத "பணயம்" பறி போய் விட்டதா அம்மா? உன் சத்தியப் பயணம் பாதியில் முடிந்து விட்டதா தாயே?

மட்டு மாநகரம் கதறி எழுகிறது, தமிழீழம் எங்கும் சோகமாகியது. ஒவ்வொரு வீட்டிலும் மரணஓலமே கேட்கிறது.

அன்னை பூபதி உண்ணா விரதம் பற்றியும், மக்கள் எழுச்சி தொடர்பாகவும் நாளாந்தம் முதற்பக்கச் செய்திகளாக வெளியிட்டு வந்த ஈழத்து அனைத்துப் பத்திரிகைகளும், கடல் கடந்த நாடுகளில் வெளியாகும் தினசரிகளும் தங்கள் நடுநடுங்கிய கரங்களால் அன்னையின் ஆருயிர் 19-04-88 செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்குப் பிரிந்த நெஞ்சைத் துணுக்குறச் செய்த அந்தச் செய்தியைச் சோக வரிகளில் எழுதி வெளியிட்டன. தமிழ்த் தினசரி ஒன்று பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

"பூபதி உயிர்த்தியாகம்
தமிழீழத்தில் சோக
வெள்ளம்"

(தொடரும்)

> மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தொடர்பகம் வெளியிட்டுள்ள "தியாகச் சுடர் அன்னை பூபதி" என்ற நூலில் இருந்து சில பகுதிகள் இங்கே தரப் படுகிறது.

# அரசியலிலிருந்து மதத்தை காப்பாற்ற மதத்தலைவர்களுக்கு வேண்டுகோள்

## -- பி.வி. நரசிம்மராவ்

(பெங்களூர்)

அரசியலின் பிடியிலிருந்து மதத்தைக் காப்பாற்றுமாறு சமயத் தலைவர்களிடம் இந்தியப் பிரதமர் பி. வி நரசிம்மராவ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன் தினம் திருப்பதியில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் குழுக் கூட்டத் தொடரின் இறுதியில் பேசிய நரசிம்மராவ் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது:

அரசியலையும் மதத்தையும் கலக்காமல் இருக்குமாறும் அடிப்படைப் பிரச்சினைகளின் அடிப்படையிலேயே தேர்தல்களில் போட்டியிடுமாறும் அரசியல் கட்சிகளை நரசிம்மராவ் கேட்டுக்கொண்டார்.

இந்தியா சமயம் சார்பற்ற ஒரு நாடு என்றும் ஆனால் சமயத்தில் நம்பிக்கையற்ற ஒரு நாடு அல்ல என்றும்;

வகுப்பு வாதம் ஜாதி வாதம் மற்றும் பண பலம் ஜனநாயகத்திற்கே ஆபத்தானது என்பதால் தேர்தல்களில் இது பாதிக்கும்படி அனுமதிக்கக் கூடாது என்றும் நரசிம்மராவ் உறுதிபடக் கூறினார்.

மதசார்பற்ற கட்சி என்றால் என்ன என்பது குறித்து

வைமீறிய செயலாகும் என்றும் நரசிம்மராவ் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## மே. நா. ராஜீய பிரதிநிதிகளை

# 9இலங்கைமீனவர் விடுதலை

(சென்னை)

இந்தியாவில் கைதான ஒன்பது இலங்கை மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியகடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதாகி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஒன்பது இலங்கைமீனவர்களும் 10ஆம் திகதி விடுதலையானார்கள்.

# அணுவாயுத பரவல் தடுப்பு ஒரே கொள்கை வேண்டும்

## - இந்திய உப ஜனாதிபதி

அணுவாயுதப் பரவல் தடுப்பில் இந்தியா நம்பிக்கை

கூறினார்.

...கும் பௌத்த குருமாரடங்கிய தூதுக்குழுவினர் யுத்த நிறுத்தத்தை வற்புறுத்துகின்றனராயினும் அவர்களும் ஆயுதங்களைக்கீழே போடவேண்டும் அப்பொழுது தான் யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் நடைபெற வாய்ப்பு ஏற்படும் அல்லது புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடமுடியாது எனத்தெரிவித்துள்ளமை ஆச்சரியம் அளிப்பதாக உள்ளது.

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுவரும் எவரும் நிபந்தனைகள் விதிப்பது ஏற்புடைய தொன்றல்ல. சமாதானத்திற்கான சூழ்நிலை ஒன்றை அவர்கள் உருவாக்க வேண்டுமே ஒழிய நிபந்தனைகளை விதிப்பது அவர்களின் நோக்கமாக இருக்கக் கூடாது. நல்லெண்ணத் தூதுக்குழுவின் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக உள்ளவற்றை அகற்ற வேண்டுமே ஒழிய நிபந்தனைகளை முட்டுக்கட்டைகளைப் போடக்கூடாது.

அத்தோடு, ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என பௌத்த குருமாரின் நல்லெண்ணத் தூதுக்குழு கோரும்போது அதற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் என்ன வித்தியாசம் உண்டு. மேலும், பேச்சுவார்த்தைக்கும், யுத்தநிறுத்தத்திற்கும் இது வரை உடன்படாத சிறிலங்கா அரசாங்கத்திடம் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய, தமிழர் அங்கீகரிக்கக் கூடிய எத்தகைய உறுதிமொழிகளை, இவர்கள் பெற்று விட்டார்கள், அல்லது தமிழருக்கு எதிரான, அவர்களின் தாயகத்திற்கு எதிரான எந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை இவ் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் நிறுத்தி விட்டார்கள்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு யுத்தநிறுத்தத்திற்கும், பேச்சுவார்த்தைக்கும் நிபந்தனைவிதிக்கும் பௌத்த நல்லெண்ணக் குழுவினர், அரசாங்கத்திடம் கோருவது சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துமாறேயாகும். இது ஒரு நிபந்தனையல்ல. யுத்தநிறுத்தம் என்பதே இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதேயாகும். அதாவது யுத்தநிறுத்தத்திற்கு புலிகளுக்குமட்டுமே நிபந்தனை விதித்துள்ளார்கள். இது பௌத்த குருமாரின் நல்லெண்ண விஜயத்தினால் எந்தளவிற்கு நன்மை ஏற்படும் என்பதைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை என்பனவற்றில் விடுதலைப்புலிகள் எப்பொழுதும் நிதானமாகவும் தெளிவாகவும் இருப்பதாகவே தெரிகிறது. ஆகையினால், விடுதலைப்புலிகள் நிபந்தனையுடன் கூடிய யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை எதற்கும் எப்பொழுதும் சம்மதிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இந் நிலையில் நல்லெண்ண விஜயங்களை மேற் கொள்ளும் எவரும், இனப்பிரச்சினையில் தமது பங்கு காத்திரமானதாகத் தீர்வு ஒன்றை நோக்கி இட்டுச் செல்லக் கூடியதாக; இருக்க வேண்டுமானால், யதார்த்த நிலையை உணர்ந்து நடுநிலையாளர்களாகச் செயற்பட்டாலே அது சாத்தியமாகும். நியாயமும் கூட.

---

...சியின் ...கூட்டத் தொட...ரின் இறுதியில் பேசிய நரசிம்ம... கேட்டுக்கொண்டார்.

இந்தியா சமயம் சார்பற்ற ... பாதிக்கும்படி அனுமதிக்கக் கூடாது என்றும் நரசிம்மராவ் உறுதிபடக் கூறினார்.

மதசார்பற்ற கட்சி என்றால் என்ன என்பது குறித்து விவரணம் செய்ய நாடு தழுவிய விவாதம் ஒன்றுக்கு தான் அழைப்பு விடுவதாகவும்,

மதசார்பற்ற கட்சிகளும் மத சார்புள்ள கட்சிகளும், தேர்தலில் போட்டி யிடுவது, அரசியல் சாசனத்தின் உணர்...

# மே. நா. ராஜீய பிரதிநிதிகளை நாட்டிலிருந்து வெளியேற்ற லிபியா முயற்சி

(திரிப்போலி)

மேற்கு நாடுகளின் ராஜீயப் பிரதி நிதிகளை வெளியேற்ற லிபியா முயற்சி மேற்கொண்டுள்ளது என்று திரிப்போலியிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ. நா வின் தடை உத்தரவு குறித்து முடிவுகளை எடுக்க அரபு நாடுகளை லிபியா அணுகி வருவதாகவும் தெரிவிக்கபபடுகிறது.

இதேநேரம் ஐ. நா. வின் விமானப் போக்குவரத்து தடைகளை மீறி லிபியா அரபு விமான நிறுவனம் ஒன்பது வழக்கமான சேவைகளை லிபியாவிலிருந்து அரபு மற்றும் ஐரோப்பிய நகரங்களுக்கு அனுப்ப உறுதி பூண்டுள்ளது.

சூடான் லிபியாவுடன் சேர்ந்து தடை நடவடிக்கைகளை நிராகரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

சீனாவும், ரஷ்யாவும்லிபியா மீதான தடை நடவடிக்கைகளை செயல் படுத்த தமது தயக்கத்தை அறிவித்துள்ளது.

# ஜேர்மனியில்இரவில்நடமாட வெளிநாட்டவருக்கு தடை

(பேர்லின்)

(ஜேர்மனியில் வெளிநாட்டவர்கள் எவரையும் இரவு 10-00 மணிக்குப் பின்னர் வீதிகளில் நடமாட வேண்டாம் என்று அரசாங்கம் தொலைக்காட்சி மூலம் அறிவித்துள்ளது.

ஜேர்மனியில் வெளிநாட்டவர்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளை அடுத்தே ஜேர்மனிய அரசாங்கம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

ஹாகன, பேர்லின், நொயிஸ், டோற் முண்ட், லிப்ஸிக் போன்ற நகரங்களில் உள்ள நாற்பது அகதி முகாம்களின் மீது ஜேர்மனிய வலதுசாரிக் கட்சிகளின் ஆதரவாளர்கள் குண்டுகளை வீசிஆர்ப்பாட்டம் செய்தனர் இது போன்ற ஐந்நூறு தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனிய அரசாங்கம் வெளிநாட்டு அகதிகள் வசிக்கும் இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப் படுத்தியுள்ளது.

# பிரிட்டன் தொழிற் கட்சியின் புதிய தலைவர் யார்?

(லண்டன்)

நான்காவது தடவையாகவும் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுவிட்ட பிரிட்டனின் தொழிற் கட்சி புதியதலைவர் ஒருவரைத் தேடுகின்றது.

இதுவரை தொழிற்கட்சித் தலைவராக பதவி வகித்து வந்த திரு-நீல் கின்னொக் பதவிவிலகியதைத்தொடர்ந்து இந்தநிலைமைஏற்பட்டுள்ளது. பதவி விலகியுள்ள கின்னொக் தமது கட்சியின் தோல்விக்கு தாம் தனிப்பட்ட முறையில் பொறுப்பில்லை எனவும், வலது சாரி பிரிட்டிஷ் பத்திரிகைகளே தமது கட்சியைத் தோல்வியடையச் செய்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

தொழிற்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்து வரும், ஸ்கொட்லாந்து வழக்கறிஞரும், மதிநுட்பம் மிகுந்தவர் என வர்ணிக்கப்படுபவருமான ஜோன்ஸ்மித் (53வயது) நியூசிலாந்தில் பிறந்தவரும், 53 வயதுடையவருமான பிரியான் கோல்ட் ஆகிய இருவரும் தொழிற்கட்சியின் தலைமையை பொறுப்பேற்க முனைந்துள்ளனர்.

தொழிற்கட்சித் தலைவராக கடந்தஒன்பது வருடங்களாகப் பதவி வகித்து வந்த நீல்கின்னொக் வேல்ஸ் பகுதியைச் சேர்ந்தவரும் ஒரு சுரங்கத் தொழிலாளியின் மகனுமாவார். சென்ற வாரம் வரை பிரிட்டனின் அடுத்த பிரதமர் என்று உறுதியாகநம்பியிருந்த கின்னொக் தேர்தலில் தோல்வியை அடுத்து பதவி விலகப் போவதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

# வழமையான வேலைகளில் யாசீர் அரபாத்

விமான விபத்தில் சிக்கி மயிரிழையில் உயிர் தப்பிய பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யசீர் அரபாத் கடந்த சனிக்கிழமை முதல் தனது வழக்கமான கடமைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்.

நெற்றியில் உரசல் காயங்களோடும், வலக் கண் வீங்கி அரைவாசி மூடப்பட்ட நிலையிலும் காணப்படும் ஜனாப் யசீர் அரபாத் சனியன்று எகிப்திய ஜனாதிபதி ஹஸ்னி முபாரக்கை வரவேற்று இருபது நிமிட நேரம் உரையாடினார்.

ஞாயிறு அன்றுருனிஷில்பாலஸ்தீன விடுதலை இயக்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

# ... - இந்திய உப ஜனாதிபதி

அணுவாயுதப் பரவல் தடுப்பில் இந்தியா நம்பிக்கை கொண்டிருக்கிறது. ஆனால் அதில் வேற்றுமை இருக்கக் கூடாது என்று இந்திய உப ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா கூறினார்.

மூன்றுநாள் அரச முறைப் பயணம்ஒன்றைமேற்கொண்டு வடகொரியா சென்றிருக்கும் அவர், வடகொரிய ஜனாதிபதி கில் மிங் சுங்கிடம் இவ்வாறு கூறினார்.

அமைதியும், சுபீட்சமும் பிரிக்கமுடியாதவை என்று கூறிய அவர், இரு கொரியாக்களும் மீளவும் ஒன்றிணைவதற்கான வழிவகைகளை விரைவு படுத்த வடகொரியாவும், தென்கொரியாவும் முயல வேண்டும் என அவர் தனது பேச்சுகளின்போது வலியுறுத்தினார்.

# அமெரிக்க அதிபர்தேர்தலில் பில்கிளின்டன் முன்னணி

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களில் பில் கிளின்டன் முன்னணியில் இருப்பதாக தெரிகின்றது. பேர்ஜீனியா மாநிலத்தில் ஜனநாயகக் கட்சி வேட்பாளருக்காக நடந்த வாக்குப் பதிவொன்றில் பில் கிளின்டன் முன்னணி நிலையை பெற்றிருப்பதால் அவர் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் காணப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பில் கிளின்டனின் பேச்சாளர் ஜெவ் எல்பர் இது பற்றி தொலைபேசி மூலம் அளித்த பேட்டியொன்றில் குறிப்பிடுகையில், சுமார் அறுபது சதவிகிதத்தினரின் ஆதரவோடு பில் கிளின்டன் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக நிறுத்தப்படுவார் எனத்தெரிவித்தார். ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் நியமனத்தைப் பெறுவதற்காக பில் கிளின்டனுடன், ஜெர்சி பிரௌன் போட்டியிட்டுவருவது தெரிந்ததே.

# அமெரிக்க முன்னாள் அதிபர் றேகன் மேடையில் தாக்கப்பட்டார்

(வாஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகன் மேடை மீது வைத்து தாக்கப்பட்டார். அவருக்கு வழங்கப்பட்ட விருதும் நொருக்கப்பட்டது

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகனின் சிறப்பான சேவையைப் பாராட்டி தேசிய ஒலிபரப்பாளர் சங்கம் அவருக்கு விசேட விருது ஒன்றை அளித்தது. இவ் விருது வழங்கும் வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது திடீரென மேடையில் தோன்றிய நபர் ஒருவர் முன்னாள் ஜனாதிபதியைத் தாக்கியதுடன், அவருக்கு வழங்கப்பட்ட கழுகு உருவிலான கண்ணாடி சிலையிலான விருதையும் தலைக்கு மேலே தூக்கி நிலத்தில் அடித்து நொருக்கினார், இதையடுத்து பிரஸ்தாப நபர் பாதுகாப்பு காவலர்களால் இழுத்துச் செல்லப்பட்டார்.

ஈழநாதம்

## தொழிலாளர் தினத்தை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினால் பனை ஏறும் போட்டி, குட்டான் இழைத்தல், கிடுகு பின்னல் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகள் தெங்கு பனம்பொருள் உ. வி. கூ. சங்க மட்டம், கொத்தணி மட்டம், மாவட்ட மட்டம் என மூன்று மட்டங்களில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகள்தொடர்பான விபரங்களை அவ்வப் பிரதேச தெங்கு பனம் பொருள் உ. வி. கூ. சங்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு 91 சித்திரை முதலாம் திகதி தொடக்கம் 92 பங்குனி 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அதிகூடிய பதனீர் உற்பத்தியில் ஈடுபட்ட உற்பத்தியாளர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

## மாணவர் இயக்க அன்னை பூபதி நினைவு நிகழ்வு

அன்னை பூபதி நினைவாக யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரால் இன்று யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நினைவஞ்சலி நிகழ்ச்சி இடம் பெறவுள்ளது.

பிற்பகல் 2-30 மணிக்கு நினைவஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன இதில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் தென்மராட்சியிலுள்ள பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மாபெரும் விளையாட்டுப் போட்டியில் சிறந்த பாடசாலையாக மட்டுவில் மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கிரிக்கெட், உதைபந்தாட்டம் ஆகிய போட்டிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி சாம்பியனாகியுள்ளது. தாச்சி, கரபந்தாட்டம் ஆகிய போட்டிகளில் மட்டுவில் மகா வித்தியாலயமும், வலைப்பந்தாட்டத்தில் டிறிபேர்க் கல்லூரியும் சாம்பியனாக தெரிவாகின (35)

## ஆப்கான். தலைநகர்கைப்பற்ற கெரில்லா குழுக்கள் முயற்சி

ஆப்கான் கெரில்லா குழுக்களிடையே மோதல்கள் இடம் பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகரித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முஜாகுதீன் கிளர்ச்சியாளர்கள் நாட்டின் தென்பகுதியில் இருந்து காபூல் நோக்கிவரும் அதேசமயம் போட்டி இயக்கம் ஒன்று வடபகுதியிலிருந்து காபூல் சென்றடைவதற்கு இன்னமும் 25 கிலோமீற்றர் தூரம் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இரு போட்டிக் குழுக்களும் காபூலை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர கடும் மோதலில் ஈடுபடக்கூடும் என ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் காபூலில் புதிய ஆட்சியாளருடன் எவ்வித உடன்பாடும் செய்து கொள்ளப் போவதில்லை என கெரில்லா குழுக்கள் தெரிவித்துள்ளன. காபூலில் ஆட்சி நடத்தும் புதிய நிர்வாகத்துக்குள்ள ஒரேவழி சரணடைவதுதான் என ஈரானினுள் இஸ்லாமிய ஐக்கிய கட்சி தெரிவித்துள்ளது.

இஸ்லாமாபாத்திலுள்ள கெரில்லா குழுவின் தலைவர் முஜாகுதீன் ஆட்களிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என கூறியுள்ளார்.

## சமாதானத் திட்டத்தை ஏற்க ஐ. நா. கோரிக்கை

ஆப்கானில் இயங்கும் போட்டிக் குழுக்கள் தமக்குள் சண்டையிடுவதை நிறுத்திவிட்டு ஐ நா. அமைதித் திட்டப்படி நடந்து கொள்ள வேண்டும் என ஐ. நா. பாதுகாப்புச் சபை கோரியுள்ளது.

ஆப்கான் ஜனாதிபதி நஜிபுல்லா பதவியிழந்த பின்பு நடந்த ஐ நா. பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டமொன்றில் ஆப்கான் அமைதிக்கு அரசியல் தீர்வைத் தவிர வேறெந்த வழியுமில்லை என கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஆனால் பல கெரில்லா குழுக்கள் ஐ. நா. சபையின் சமாதானத் திட்டத்தை நிராகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கிளர்ச்சியாளர்கள் நிதானத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென அமெரிக்கா கேட்டுள்ளது

ஆப்கான் அதிகாரத்தை ஆளும் கட்சியின் நான்கு துணை ஜனாதிபதிகள் கொண்ட குழு கைப்பற்றியிருப்பதும் ஜனாதிபதி நஜிபுல்லா பதவிதுறந்து காபூலிலுள்ள ஐ. நா. காரியாலயத்தில் சரணடைந்திருப்பதும் தெரிந்ததே.

## கம்யூ. செயலாளர் தெரிவு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இந்திரஜித் குப்தா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இந்திய க. கட்சியின் தேசிய சபை 31 உறுப்பினர் நிர்வாகக் குழுவையும் தேர்ந்தெடுத்தது. நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் இந்தத் தேர்வுகள் இடம் பெற்றன

### வேலை இழந்து

## நாடு திரும்பியோருக்கு வங்கிக் கடன் உதவி

(கொழும்பு)

மத்திய கிழக்கு யுத்தம் காரணமாக தொழில் வாய்ப்புக்களை இழந்து நாடு திரும்பிய இலங்கையர் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு என கடன் வழங்கும் திட்டமொன்றை வேலை வாய்ப்புப் பணியகமும் மக்கள் வங்கியும் இணைந்து மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் படி பதினொரு சதவீத வட்டிக்கு பத்தாயிரம் முதல் முப்பதினாயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படும் என்றும்,

நாடு திரும்பியவருக்கோ அல்லது குடும்ப அங்கத்தவர்களுக்கோ இந்த கடன் வசதி அளிக்கப்படும் என்றும்,

நாடு தழுவிய ரீதியில் இது அமுல் படுததப்படும் என்றும், 329 மக்கள் வங்கி முகாமையாளர்களுக்கு இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### வேலைநாட்கள் குறைந்துள்ளதால்

## தோட்டத் தொழிலாளர்கள் பட்டினி நிலையிலுள்ளனர்

(பதுளை)

தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதத்தில் அதிக பட்சம் பன்னிரண்டு நாட்களுக்கே வேலை வழங்கப்படுவதனால் தோட்டத்தொழிலாளர்களின் குடும்பங்கள் பட்டினி நிலையை எதிர்நோக்கியுள்ளன என்று இலங்கை விவசாய கிராமிய தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் வி. எஸ் ராஜா தெரிவித்துள்ளார்.

இதனால் தோட்டத்தொழிலாளர்களுக்கு வரட்சி நிவாரணம் அல்லது இருபத்தைந்து நாட்கள் வேலை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## 75 கன அடிக்கு மேல் மரம் வைத்திருக்கத் தடை

(கொழும்பு)

முன் அனுமதி இன்றி 75கன அடிக்குமேல்காட்டு மரங்களை வைத்திருத்தல் தடைசெய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் கையிருப்பில் வைத்திருப்போர் உதவி அரசாங்க அதிபருக்கு அறிவிக்க வேண்டுமெனவும் மரம் வெட்டுதல், கடத்துதல் முதலிய மோசடிகளை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு எந்த ஒரு நிலையமோ அல்லது தனி நபரோ 75 கன அடிக்கும் அதிகமான மரங்கள் வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மாகாண சபை உறுப்பினருக்கு

## முறையாக உடையணிந்து சபைக்குவர ஆலோசனை

'சிறிலங்கா ஆர்மி' என்று எழுதப்பட்ட கறுப்பு நிற ரீசேர்ட் ஒன்றை அணிந்து கொண்ட மாகாணசபை உறுப்பினர்க்கு முறையாக ஆடை அணிய வேண்டும் என்று ஊவா மாகாணசபைத் தலைவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஊவா மாகாணத்தில் கடமையாற்றும் பொலிசார் பல்வேறு சந்தர்ப்பங்களில் தொல்லை கொடுத்து வருகிறார்கள். என்றும், பொலிசாரின் அட்டகாசத்திற்கு முடிவு கட்டும் வரை கறுப்பு நிற ரீசேர்ட் அணிந்தே சபைக்கு வர இருப்பதாக ஊவா மாகாணசபை உறுப்பினர் ஹீம் பண்டா சார்பில் கூறிய எதிர்க்கட்சி உறுப்பினர் நிலான் பெரேரா பொலிசாரால் அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் அவமானப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.


### அன்னை பூபதி

## பொது அறிவு தேர்வு முடிவு நாளை வெளிவரும்

அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு 1992 முடிவுகள் நாளை வெளிவரவிருக்கிறது. நாளை எல்லா மாவட்டங்களிலும் நிகழும் அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்ச்சிகளில் அந்தந்த மாவட்டங்களில் உயர் அபிரிவில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

சித்தியடைந்த ஏனைய மாணவர்க்கான சான்றிதழ்கள் அவர்களது பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் இவ்வாறு விடுதலைப் புலிகள் மாணவர்இயக்கத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். கேணல் ஜோய்

## வீடமைப்புத்திட்டத்தில் அன்னை பூபதி நினைவு

(யாழ்ப்பாணம்)

நாவற் கோவிலில் திருக்கோணமலை இடம்பெயர்ந்த மக்கள்குடியமர்த்தப்பட்டுள்ள லெப். கேணல் ஜோய் வீடமைப்புத் திட்டத்தில் இன்று அன்னை பூபதியின் 4-ம்ஆண்டு ஞாபகார்த்த தினத்தையிட்டு அடையாள உண்ணா விரதமும், நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை அடையாள உண்ணாவிரதமும், 4 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெறும். நினைவஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

### கிளிநொச்சி - முல்லைத்தீவு

## தொண். ஆசிரியர்களையும் சங்கத்தில் இணைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

நேற்று இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர் கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பட்டப் படிப்புக் கல்லூரியில் இடம் பெற்ற மேற்படி கூட்டத்தில் கிளி

அதிகாரி ஒருவரும், ஆசிரியர் சங்க அதிகாரி மகாசிவம் அவர்களும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பதவி

யத் தருகிறார் இந்தத் திகதி

அருட்திரு சிங்கராயர் தெரிவிக்கிறார். ஆனால், பாலம் பொதுப் பணிமன்றக் கூட்டம்



யாழ் ஏழாலை கிழக்கு

## திருமதி
## மனோன்மணி கணபதிப்பிள்ளை

மலர்வு: 16--03-1914

உதிர்வு: 15-04-1991

திதி; 18-04-1992

நினைவில் அகலாத ஒளி விளக்கே
எம்மை நல் மக்களாக வளர்ந்தபுகழ் உமக்கே
ஏழாலை ஊர்தனிலே ஒளி படைத்தீர்
எம் குடும்பத்திற்கு புகழ் கொடுத்தீர்
கண் இருந்தும் உறக்கமில்லை உமை நினைத்து
ஆண்டு ஒன்று அகன்றாலும் உம்
அன்பு நினைவுகள் அகலாது.

உங்கள் பிரிவுதுயரில் வாழும்
மகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள் (சுவர்ணா, பகி)
மற்றும் பேரப்பிள்ளைகள்,
மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

S. பாலசுப்பிரமணியம்
விவேகானந்தநகர்
155, ஆம் கட்டை
கிளிநொச்சி.

(2461)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஞாபகார்த்த தினத்தையிட்டு அடையாள உண்ணாவிரதமும், நினைவஞ்சலிக் கூட்டலைப் புலிகள் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

# விசர் நாய் கடி மருந்து யாழ். கொண்டு வரமுயற்சி

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசகுழு மூலம் விசர் நாய் கடி மருந்து கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரி சிலருடன் அண்மைக்காலமாக பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவும் அதி விரைவில் மருந்து யாழ்ப்பாணம் கொண்டு வரப்படும் என்றும் யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் கூறினார். (75)

## எம் மண்ணில்

கலவரங்களால் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட பின்னரும் கொழும்பில் சுகவாழ்வு தேடி இக்கிடப்பதாகக் கருதுபவர்கள் எம்மிடையே வாழும் வரையில் இத்தகைய நாடகங்கள் மேடையேற்றப்படவேண்டும். இவற்றின்மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பாடுபடல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

சந்தனக்காடு நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்களுக்கு மகளிர்படைப் பிரிவுத் தளபதி செல்வி ஜெயா அவர்களும், மக்கள் முன்னணிச் செயலதிபர் யோகரட்ணம் யோகி அவர்களும் விருதுகளை வழங்கிக்கௌரவித்தனர்.

சந்தனக்காடு நாடகம் பார்வையாளர் மத்தியில் ஏற்படுத்தும் உணர்வுகள்பற்றி கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் கருத்துரை வழங்கினார்.

## குற்றப்

டப்பட்டு பத்து வருடகாலம் ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இதே மயில்வாகனம் சிவலிங்கம் என்பவருக்கெதிராக மற்றுமொருவழக்கு கடந்த மூன்றாம் திகதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டது ஒரே நபருக்கு எதிராக இரண்டாவது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் குளறுபடி சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து அவ்வழக்கு அரச தரப்பு சட்டத்தரணியால் வாபஸ்பெறப் பட்டது.

## பொலிஸ்

பொலிஸ் உத்தியோகத்தர்களின் லீவை ரத்துச் செய்து பாதுகாப்பு ஒழுங்குகளைப் பலப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் பணித்துள்ளார். அம்பாறையிலும், மஹரகமவிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## குண்டு வெடிப்பு

கிளையொன்றின் காரியதரிசி அளித்த தீவிர உதவியோடு விடுதலைப்புலிகள் இந்த இரு குண்டு வெடிப்புகளையும் செய்தனர் என்று தமது விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளதாகவும்,

பழுகாமத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் இராணுவத் தலைவர் உட்பட விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவின் இரு முக்கிய புலிகள் இந்த சம்பவத்தின் சூத்திரதாரிகள் என்றும் சிறிலங்கா புலனாய்வு நிபுணர்கள் இனங்கண்டுள்ளனர்.

அம்பாறை குண்டு வெடிப்புக்கு பயன்படுத்திய பஸ் பாதை யாத்திரைக்கு ஆட்களை ஏற்றிச் சென்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண பட்டப் படிப்புக் கல்லூரியில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் கிளிநொச்சி - முல்லைத்தீவு ஆகிய தொண்டர் ஆசிரியர்களை தொண்டர் ஆசிரியர் சங்கத்தில் இணைப்பது,

கல்வி அமைச்சுக்கு தொண்டர் ஆசிரியர்களினால் அண்மையில் நடத்தப்பட்ட போராட்டம் பற்றியும் தொண்டர் ஆசிரியர் படும் பொருளாதாரத் துன்பங்களை விளக்குவது. அத்துடன் நிரந்தர நியமனம் வழங்குமாறு கொழும்பு சென்று பேச்சுவார்த்தை நடத்துவது.

அவ்வாறு பேச்சு வார்த்தைக்கு அனுமதி அளிக்கப்படும் பட்சத்தில் முல்லைத்தீவு - கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒரு தொண்டர் ஆசிரியர் பிரதிநிதியும் யாழ். மாவட்டத்தில் இருந்து இரு தொண்டர் ஆசிரியர் பிரதிநிதிகளும், கல்வித் திணைக்கள

## பதவி

யத் தருகிறார் இந்தத் திகதியில் பாலத்தில் செயற்குழுக் கூட்டம் நடந்ததாக எமது வியாழன் செய்தியில் எதுவும் இடம்பெறவில்லை.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகப் பாலம் பணிமனையில் மாதாந்தக் கூட்டம் நடைபெறவில்லை என

## கொழும்பு

உளவுப் படையினர் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

தாண்டிக்குளம் பகுதியில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான வீடு ஒன்றில் செயல்படும் உளவுப்படையினர் அப்பாவிப் பொதுமக்களை அங்கு அழைத்துச் சென்று தாக்குவதுடன் பல சித்திரவதைகளையும் மேற்கொள்கின்றனர் என்று அங்கிருந்துவரும் பயணிகள் தெரிவிக்கின்றனர். (தி)

அருட்திரு சிங்கராயர் தெரிவிக்கிறார். ஆனால், பாலம் பொதுப் பணிமன்றக் கூட்டம் 23-02-92 அன்று பிரம்மசிறி யோகீஸ்வர சர்மா தலைமையில் நடைபெற்றுள்ளது. இதில் அருட்திரு சிங்கராயர் ஒரு சாதாரண உறுப்பினராகக் கலந்து கொண்டு தமது வரவை ஒப்பமிட்டு பதிவு செய்துள்ளார்கள். இது இப்படியிருக்க, மூன்று மாதங்களாக கூட்டம் நடைபெறவில்லை என்று எழுதுவது உண்மைக்குப் புறம்பானதாகும்.

''எனது பதவி விலகல் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ அன்றேல் எனக்கு ஏழு அறிவுறுத்தல்களோ கிடைக்கவில்லை'' என்று எமக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார். ஆனால், ஆஸ்பத்திரி வீதி முகவரியிலிருந்து அருட்திரு ஆபரணம் சிங்கராயர் தன் கைப்பட எழுதிய கடிதம் ஒன்றில் (23-12-91) முன்னாள் தலைவர் என்ற ரீதியில் இம் மடலை எழுதுகிறேன் என்ற வாசகம் இடம் பெறுகிறது. இது இவ்வாறிருக்க தான் பதவி விலகியது பற்றி அறிவுறுத்தல் கிடைக்கவில்லை என்று எவ்வாறு கூற முடியும்?

மேலும் ஏழு அறிவுறுத்தல்கள் அருட்திருசிங்கராயருக்குக் கிடைத்ததோ, இல்லையோ, பாலம் தலைவர் எனக் குறிப்பிட்டு பிரம்மசிறி யோகீஸ்வர சர்மாவும், செயலாளர் திரு. சூ. சிறிலும் கையெழுத்திட்டு அனுப்பிய ஏழு அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதத்தில் அருட்திரு சிங்கராயரின் இராஜினாமா ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட செய்தியும்உள்ளடங்கியுள்ளது இதன் பிரதிகள் சில திணைக்களப் பணிப்பாளர்களுக்கும், யாழ்ப்பாணத்திலுள்ள பல முக்கியஸ்தர்களுக்கும் அனுப்பப் பட்டுள்ளதாக நாம் அறிந்துள்ளோம்.


## அன்னை பூபதி நினைவாக...

நினைவுரைகளும். கலை நிகழ்ச்சிகளும்

இடம்: கைலாசபதி அரங்கு, யாழ். பல்கலைக் கழகம்

காலம்; இன்று (18-04-1992) சனிக்கிழமை
பி. ப. 2-30மணி

அன்னை பூபதி நினைவுச் சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் நினைவுரைகளும் வில்லிசை, நாட்டிய நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன,

இந் நிகழ்வில் அனைத்து மாணவர்களையும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்,

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
யாழ்மாவட்டம்

(சி/4282)